

உ

# அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் & சுந்தரேஸ்வரர் திருக்கோயில்



(தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறைக்கு உட்பட்டது)

19, முத்து முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014. ✆ : 044 - 2835 1928

அனுப்புநர் :

கோ.முரளிதரன்,
செயல் அலுவலர்

பெறுநர் :
திரு மக்கள் தொடர்பு அலுவலர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை – 34

19/10/2022
நாள் :

அய்யா / அம்மையீர்,

பொருள்: வேலைவாய்ப்பு கோரும் விளம்பரம் – இணையதளத்தில் பதிவேற்றம் செய்து தரக்கோருதல் – அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை–14– தொடர்பாக.

*****

சென்னை–14, இராயப்பேட்டை, முத்து முதலி தெருவில், அமைந்துள்ள அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் (ம) சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சட்டப்பிரிவு 46 (iii) ன் கீழ் பட்டியலைச்சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு தக்காராக துணை ஆணையர் / நகை சரிபார்ப்பு அலுவலரும் (சென்னை–04) மற்றும் சட்டப்பிரிவு 45 (i)–ன் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள முதல் நிலை செயல் அலுவலரும் நிர்வகித்து வருகின்றனர். இத்திருக்கோயிலின் வரி விதிப்பு வருமானம் பசலி 1428–க்கு ரூ.91,17,496/– ஆகும்.

இத்திருக்கோயிலின் காலிப்பணியிடங்கள் நிரப்ப வேலை வாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பினை துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய கோருதல். நாள்.19.10.2022 முதல் 17.11.2022 மாலை 5.45 வரை பதிவிறக்கம் செய்யும் வகையில் விண்ணப்பம் மற்றும் நிபந்தனை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

19/10/2022
செயல் அலுவலர்
அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும்
சுந்தரேஸ்வரர் திருக்கோயில்
இராயப்பேட்டை, சென்னை-14.

<u>இணைப்பு:–</u>

வேலை வாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பு

தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை–14

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பரம் அறிவிப்பு

சென்னை–14, இராயப்பேட்டை, அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து மதத்தினைச் சார்ந்த நபர்கள் 19.10.2022 முதல் 17.11.2022 வரை அலுவலக நாட்களில் காலை 10.10 மணி முதல் மாலை 5.45 மணி வரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | கணினி இயங்குபவர் | PAY MATRIX – 15, 13200–41800 அடிப்படை சம்பளம் ரூ.13200 | 1 | 1. அரசு நிறுவனம்/அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட Diploma in Computer Science கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>2. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்ய தெரிந்திருக்க வேண்டும். |
| 2 | மின் பணியாளர் | PAY MATRIX – 13, 12600–39900 அடிப்படை சம்பளம் ரூ. 12600 | 1 | 1. அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட மின் தொழில் பயிற்சி நிறுவன சான்றிதழ் (ITI) பெற்றிருக்க வேண்டும். மின் உரிமம் வாரியத்தின் B–சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 3 | அர்ச்சகர் | PAY MATRIX – 14, 13200–41800 அடிப்படை சம்பளம் ரூ.13200 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாடசாலையில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதாக வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| 4 | ஓதுவார் (மூன்றாம் அழைப்பு) | PAY MATRIX – 13, 12600–39900 அடிப்படை சம்பளம் ரூ.12600 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் தேவாரப்பாடசாலையில் இதன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் மூன்றாண்டு படிப்பினை மேற்கொண்டதாக வழங்கப்பட்ட சான்றிதழைப்பெற்றிருக்க வேண்டும். |
| 5 | சுயம்பாகி | PAY MATRIX – 14, 13200–41800 அடிப்படை சம்பளம் ரூ.13200 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. திருக்கோயில்களில் ஆகம விதிப்படி நைவேத்தியம் மற்றும் பிரசாதம் தயார் செய்ய தெரிந்திருக்க வேண்டும் மற்றும் திருக்கோயில்களின் பூஜை மற்றும் சடங்குகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | மேளக்குழு (நாதஸ்வரம் பணிக்கு) | PAY MATRIX – 15, 15300–48700 அடிப்படை சம்பளம் ரூ.15300 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. சமய நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு அரசு நிறுவனம் அல்லது பல்கலைகழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இசைப்பள்ளியில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 7 | பகல் காவலர் | PAY MATRIX – 12, 11600–36800 அடிப்படை சம்பளம் ரூ.11600 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. காவலர் பணி செய்ய தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். |
| 8 | இரவு காவலர் | PAY MATRIX – 12, 11600–36800 அடிப்படை சம்பளம் ரூ.11600 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. காவலர் பணி செய்ய தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். |
| 9 | துப்புரவாளர் | PAY MATRIX – 10, 10000–31500 அடிப்படை சம்பளம் ரூ.10000 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. துப்புரவு பணி செய்ய தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். |
| கூடுதல் | | | 9 | |

விண்ணப்பதாரர் 01.07.2022 அன்று 18 வயது முழுமையடைந்தவராகவும் 35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பணியிட விவரங்களுக்கான கல்வித்தகுதி, வயதுவரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டுக் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பபடிவம் மற்றும் நிபந்தனைகளை hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் செயல் அலுவலர், அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை–14 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.17.11.2022 அன்று மாலை 5.45 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

கோ.முரளிதரன்,
செயல் அலுவலர்

ஆர்.ஹரிஹரன்,
தக்கார்/ துணை ஆணையர் /
நகை சரிபார்ப்பு அலுவலர்,
சென்னை–04

# அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில்,
## இராயப்பேட்டை, சென்னை–14
## விண்ணப்பப்படிவம்

| |
|---|
| தற்போதைய புகைப்படம் (சுயசான்யொப் பத்துடன்) |

பெயர் :

முகவரி :

கல்வித்தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) :

பிறந்த தேதி/வயது :

சமயம் :

சாதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) :

முன்னுரிமையின் விவரம் :

இதர தகுதிகள் விவரம் :

தொலைபேசி/கைப்பேசி எண் :

விண்ணப்பிக்கும் பணியின் பெயர் (ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்) :

மருத்துவச்சான்று (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

காவல்துறைச் சான்று (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

இடம்:

நாள்:

விண்ணப்பதாரர் கையொப்பம்

இணைப்புகள்

1. கல்வித்தகுதி சான்றின் நகல்கள் (Tc & Marklist)
2. சாதிச்சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
3. குடும்ப அடையாள அட்டை நகல்
4. முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certificate)
5. ஆதார் அட்டை நகல்
6. வேலை வாய்ப்பு பதிவு அட்டை நகல்
7. சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலையுடன் கூடிய உறை

கோ.முரளிதரன்,
செயல் அலுவலர்

ஆர்.ஹரிஹரன்,
தக்கார்/ துணை ஆணையர் /
நகை சரிபார்ப்பு அலுவலர்,
சென்னை-04

## நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1 | திருக்கோயில் மூலம் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் படி மட்டுமே உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். செயல் அலுவலர், அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை–14 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் நிபந்தனைகளை hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணியிட விவரங்களுக்குக்கான கல்வித்தகுதி, வயதுவரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டுக் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். |
| 2 | விண்ணப்பதாரர் 01.07.2022 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். |
| 3 | விண்ணப்பதாரர்கள் தமிழில் நன்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். மேலும் இந்து மதத்தை சார்ந்தவராகவும் இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். |
| 4 | விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். அசல் சான்றிதழ் எக்காரணத்தினை முன்னிட்டும் அனுப்பக்கூடாது. அசல் சான்றிதழ் நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 5 | விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் உடல் தகுதி சான்று பெற்று நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். அனைத்து பணியிடங்களுக்கும் காவல்துறை சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். |
| 6 | மேற்கண்ட பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதி என்பது இத்திருக்கோயிலின் காலகாலமாக பின்பற்றி பணியாற்றி வந்த விவரங்களின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. |
| 7 | நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், நன்னடத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பாற்றவோ ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், பட்டகடனை தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அரசு பணியிலிருந்தும், இதர நிறுவனங்களிலிருந்தும், திருக்கோயில் பணியிலிருந்தும் விலக்கப்பட்டவர்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் போன்ற நபர்கள் விண்ணப்பிக்க தகுதி அற்றவர்கள். |
| 8 | இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பில் காணும் பணியிடங்கள் இத்திருக்கோயியலின் பாரம்பரியம் மற்றும் நடைமுறையில் உள்ள பணியிடங்கள் என்பதால், அதனடிப்படையில் பணியிடங்களுக்கான தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.17.11.2022 அன்று மாலை 5.45 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும், அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டாது. |
| 9 | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் ஒப்புதல் அட்டையுடன் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். |
| 10 | நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். |
| 11 | திருக்கோயிலுக்கு வரப்பெறும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கான அறிவிப்பு அனுப்பப்படும். |
| 12 | பணி நியமனம் அரசாணை எண்.114, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4–1) நாள்.03.09.2020–இன் விதிகளுக்குட்பட்டது. (பதிவிறக்கம் செய்து அறியவும்) |

கோ.முரளிதரன்,
செயல் அலுவலர்

ஆர்.ஹரிஹரன்,
தக்கார்/ துணை ஆணையர் /
நகை சரிபார்ப்பு அலுவலர்,
சென்னை–04